**சார்பு நீதிமன்றம், நாங்குநேரி**

**முன்னிலை:- திரு. எம். ராமதாஸ், எம்.எல்.,**

**சார்பு நீதிபதி, நாங்குநேரி**

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 07 ம் நாள் சனிக்கிழமை

**நிறைவேற்றுதல் மனு எண்.4/2024**

M/S. ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் லிமிடெட்.,
அதன் சிறப்பு முகவர்
திரு. சுப்பிரமணியன் மூலம் .... மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர்

// எதிர் //

1) வியாகுலரோஸ் (இறப்பு) *
2) சதீஷ்குமார் .... எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகள்

*(*இ.ம.எண்.2/2024 ல் 15.09.2025 ம் தேதியிட்ட உத்தரவுப்படி நிறைவேற்றுதல் மனு சீர்திருத்தம் செய்யப்பட்டது)*

இந்த மனுவானது, என் முன்பு இறுதியாக 02.03.2026 அன்று விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. E. சீனிவாசன் அவர்கள் முன்னிலையாகியும், 1 ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையிலும், 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. மு. மணிகண்டன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரையை கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.03.07 18:43:07 +0530

## உத்தரவு

இம்மனுவில் கண்ட தொகையை மனுதாரருக்கு எதிர்மனுதாரர்களிடமிருந்து வசூலாகும் பொருட்டு எதிர்மனுதாரர்களுக்கு உரிமையியல் விசாரணை சட்டத்தின் படி அறிவிப்பு அனுப்பி செலுத்த தவறும் பட்சத்தில் வாரண்டில் சிவில் ஜெயிலில் பிடித்து வைக்க உத்தரவிட வேண்டி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனு சுருக்கம் :-**

மனுதாரருக்கு ஆதரவாக Arbitration No.339/2019 ல் 30.09.2019 ம் தேதியிட்ட அவார்டு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், அதை நிறைவேற்ற இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3) 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :-**

மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், மனுதாரர் வேண்டுமென்றே கெட்ட எண்ணத்துடன் காலம் சென்ற 1ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளான மனைவி மற்றும் மக்கள்களை வாரிசாக கட்சி சேர்க்கவில்லை என்றும், எனவே மனு அவசிய தரப்பினர்களை கட்சி சேர்க்காத தோஷத்திற்குட்பட்டு தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாய் உள்ளது என்றும், 2ம் எதிர்மனுதாரர் எந்தவிதமான உத்தரவாத கையொப்பமும் 1ம் எதிர்மனுதாரருக்காக மனுதாரர் நிதி நிறுவனத்தில் செய்து கொடுத்தது கிடையாது என்றும், 1ம் எதிர்மனுதாரர், மனுதாரர் நிதி நிறுவனத்தில் கடன் பெற்றதாக கூறப்படும் நிலையில், அதனை சட்டப்படி அவருடைய வாரிசுகளும், சட்டப்படி திரும்ப செலுத்த

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.03.07 18:43:13 +0530

கடமைப்பட்டவர்கள் ஆவார்கள் என்றும், அவர்களை சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படி தாக்கல் செய்துள்ள நிலையில் அது நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே மனு இந்த 2 ம் எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4) **தீர்வுக்குரிய பிரச்சனை** :-

இம்மனுவில் கண்ட தொகையை மனுதாரருக்கு 2 ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலாகும் பொருட்டு 2 ம் எதிர்மனுதாரருக்கு உரிமையியல் விசாரணை சட்டத்தின் படி அறிவிப்பு அனுப்பி செலுத்த தவறும் பட்சத்தில் வாரண்டில் சிவில் ஜெயிலில் பிடித்து வைக்க உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5) இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. 1ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டார் என்பது தெரிகிறது. 2 ம் எதிர்மனுதாரர் எதிருரை தாக்கல் செய்து, மனுதாரர் வேண்டுமென்றே கெட்ட எண்ணத்துடன் காலம் சென்ற 1ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளான மனைவி மற்றும் மக்கள்களை வாரிசாக கட்சி சேர்க்கவில்லை என்றும், எனவே மனு அவசிய தரப்பினர்களை கட்சி சேர்க்காத தோஷத்திற்குட்பட்டு தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாய் உள்ளது என்றும், 2 ம் எதிர்மனுதாரர் எந்தவிதமான உத்தரவாத கையொப்பமும், 1ம் எதிர்மனுதாரருக்காக மனுதாரர் நிதி நிறுவனத்தில் செய்து கொடுத்தது கிடையாது என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், மனுதாரர் ம.சா.1 ஆக



RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.03.07 18:43:18 +0530

விசாரிக்கப்படும் போது, 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்கண்டவாறு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட Arbitration No.339/2019, 30.09.2019 ல் பிறப்பிக்கப்பட்டுள்ள அவார்டை நிறைவேற்ற இம்மனு தாக்கல் செய்திருக்கும் நிலையில், 2ம் எதிர்மனுதாரர், கடன் ஒப்பந்தத்தில் உத்தரவாதம் அளித்துள்ளது (Guarantor) அவார்டை பார்வையிடும் போது தெளிவாக தெரிகிறது. மேற்கண்ட நிலையில், கடன் பெற்றவரான 1ம் எதிர்மனுதாரரும், 2ம் எதிர்மனுதாரரும் மேற்கண்ட கடனுக்கு தனித்தனியாகவோ, கூட்டாகவோ பொறுப்பாவார் என்பது தெளிவாகிறது. 1ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையில், அவரது வாரிசுகளை சேர்த்துதான் நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்ற 2ம் எதிர்மனுதாரரின் வாதம் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது. ஏனென்றால், 2ம் எதிர்மனுதாரர், 1ம் எதிர்மனுதாரர் பெற்ற கடனுக்கு தனியாகவோ அல்லது கூட்டாகவோ பொறுப்பு ஏற்றுள்ள நிலையில், 1ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளை சேர்க்காமல், 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக மனுதாரரால் நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்ய முடியும் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும், மேற்கண்ட அவார்டுக்கு எதிராக மேல்முறையீடோ அல்லது சீராய்வு மனுவோ தாக்கல் செய்யவில்லை என்பது தெரிகிறது. மேற்கண்ட 30.09.2019 ம் தேதியிட்ட அவார்டு 2ம் எதிர்மனுதாரரை கட்டுப்படுத்துவதாகவே உள்ளது. மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், 21.04.2025 ம் தேதியிட்ட மாண்புமிகு உச்சநீதிமன்றம் பிறப்பித்த Electrosteel Steel Limited

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.03.07 18:43:24 +0530

(Now M/S ESL Steel Limited) ….. Appellant Vs. Ispat Carrier Private Limited …. Respondent என்ற முன்தீர்ப்புரையை சுட்டிக்காட்டி, அவார்டுக்கு எதிராக மேல்முறையீடோ, சீராய்வு மனுவோ தாக்கல் செய்யாமல், நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்துள்ள நீதிமன்றத்தில் அவார்டு செல்லுபடியாகாது என்று வாதிட முடியாது என வாதிட்டார். மேற்கண்ட முன்தீர்ப்புரை இம்மனுவிற்கு பொருந்துவதாகவே உள்ளது.

**6)** 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்கண்ட தொகையை செலுத்த போதுமான வருமானம் உள்ளதா? என்பதையும், மேற்கண்ட தொகையை வேண்டுமென்றே 2 ம் எதிர்மனுதாரர் செலுத்தாமல் இருக்கிறாரா? என்பதையும் அறியும் பொருட்டு 'means enquiry' செய்யப்பட்டது.

**7)** மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டார். அதில் 2 ம் எதிர்மனுதாரருக்கு மனுவில் கண்ட தொகையை செலுத்துவதற்கு போதிய வருமானம் இருந்தும் வேண்டுமென்றே செலுத்தாமல் இருந்து வருகிறார் என சாட்சியம் அளித்துள்ளது தெரிய வருகிறது. மேற்கண்ட மனுதாரரின் சாட்சியம் நம்பும்படியாகத்தான் உள்ளது.

**8)** மேற்கண்டவற்றிலிருந்து, 2 ம் எதிர்மனுதாரர் போதிய வசதி இருந்தும் வேண்டுமென்றே அவார்டு தொகையை செலுத்தாமல் இருந்து வருகிறார் என்று இந்நீதிமன்றம் கருதுவதால், மேற்கண்ட அவார்டு தொகையினை வசூலிக்கும் பொருட்டு 2 ம் எதிர்மனுதாரரை அரெஸ்ட் செய்து, சிவில் ஜெயிலில் அடைக்க ஏதுவாக இம்மனு அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது



RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.03.07 18:43:30 +0530

**9)** முடிவாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 07 ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.03.07 18:43:35 +0530

சார்பு நீதிபதி,

நாங்குநேரி

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி :</u>**

ம.சா.1 - சுப்பிரமணியன்

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> :** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> :** இல்லை

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.03.07 18:43:41 +0530

சார்பு நீதிபதி,

நாங்குநேரி

சார்பு நீதிமன்றம்

நாங்குநேரி

நிறைவேற்றுதல் மனு எண்.4/2024

நேரிய/வரைவு உத்தரவு

நாள் - 07.03.2026

*EP.No.4 of 2024*